விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 189 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 12 வியாழக்கிழமை (26.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிட்ட ஐ.நா ஆணையர்

### ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் செம்மணி மனிதப் புதைகுழியை நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பிற்பகல் ஹெலியூடாக வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் பிற்பகல் 4.30 மணியளவில் செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம்

15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணிப் புதைகுழி

## 2ஆம் கட்ட அகழ்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுக்கான நிதி விடுவிக்கப்பட்டுள்ளதால், இன்று வியாழக்கிழமை இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

15ஆம் பக்கம் பார்க்க


### நயினைத் தாய்க்கு இன்று கொடியேற்றம்



15ஆம் பக்கம் பார்க்க

### ‘மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரும்’

# ‘அணையா விளக்கு’ முன்பாக அஞ்சலி செலுத்திய வோல்கர்



**(யாழ்ப்பாணம்)**

- **மலர் தூவி அஞ்சலி செலுத்தியதோடு அகவணக்கமும் செய்தார்.**
- **பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் கையளிப்பு.**

*(15ஆம் பக்கம் பார்க்க)*

### கட்சிப் பதவிகளை துறந்தார் ரவிகரன் எம்.பி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்கான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தவிசாளர்

15ஆம் பக்கம் பார்க்க

## போராட்டக் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் நடைபெற்று வரும் அணையா விளக்குப் போராட்டத்தில் கலந்து கொள்ள சென்ற வடமாகாண சபை அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின்

15ஆம் பக்கம் பார்க்க



## தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை அரசுடன் இணைந்தே பெறவேண்டும்

### ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர்

(திருகோணமலை)

இலங்கையில் தமிழ் மக்கள் தங்களுடைய பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கத்துடன் இணைந்துதான் பெறவேண்டிய சூழ்நிலை இருப்பதாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை யுபிலி மண்டபத்தில் நேற்றுப் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலின்போது

16ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர்க் கந்தனை வழிபட்ட மனித உரிமை ஆணையாளர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை நேற்று மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர்

15ஆம் பக்கம் பார்க்க

### காக்கைதீவில்

## மீன்வாங்க சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காக்கைதீவு மீன் சந்தைக்கு மீன் வாங்க

15ஆம் பக்கம் பார்க்க

### ஐ.நா ஆணையாளரிடம்

## 6 கோரிக்கைகள் பொறிக்கப்பட்ட செப்புத் தகடு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி படுகொலைக்கு நீதி கோரி கடந்த மூன்று நாட்களாகப் போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார்களால் ஐக்கிய நாடுகள் மனித

15ஆம் பக்கம் பார்க்க




**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக சமூகத்தில் மனித உரிமைகளை பாதுகாப்பது முக்கிய அம்சமாகும்

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருடனான சந்திப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர்



ஜனநாயக சமூகத்தில் மனித உரிமைகளைப்பாதுகாப்பது முக்கிய அம்சமாகும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் உடனான சந்திப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

குறித்த இருவருக்குமான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கின் வருகையுடன், நமது நாட்டில் மனித உரிமைகள் குறித்து ஒரு கலந்துரையாடல் எழுந்துள்ளது. ஜனநாயக சமூகத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றன.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை, பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை, பெண்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், இனப் பாகுபாடுகள் காட்டாமை, வன்முறையின்மை மற்றும் சுற்றுச்சூழல் உரிமைகள் பாதுகாப்பு போன்ற உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாப்பது ஜனநாயகத்தின் தனித்துவமான அம்சமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நமது நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமாகும் என்பன ஊடாக யுத்தத்திற்குப் பின்னைய காலத்திலான நல்லிணக்கம், நட்புறவு மற்றும் ஒற்றுமையை அடைய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, பெரும்பாலான அரசியல் கட்சிகள் உடன்படுகின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் தெளிவான மாற்றத்தைச் செய்ய வேண்டும். இதில் திருத்தத்தைக் கொண்டு வர ஐக்கிய மக்கள் சக்தி தமது ஆதரவை நல்கும். நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் மூலம் கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது. இதிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நான்காவது தூணாக சுதந்திரமான ஊடகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்களால் நடத்தப்படும் ஊடகங்களை ஒழுங்குமுறைப்படுத்த பல்வேறு ஆணைக்குழுக்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், எதிர்க்கட்சி அவற்றை எதிர்க்கும்.

பொருளாதார, சமூக, மத உரிமைகள், அதேபோல் இன்று அடிப்படை மற்றும் மனித உரிமைகளாக இருக்கும்வாழும்உரிமையும்உறுதிப்படுத்தப்பட வேண்டும். தற்போதைய பொருட்களின் விலைகளால் மக்களின் வாழ்வாதாரம் கூட சீர்குலைந்துள்ளது. வாழ்வதற்கான உரிமை கூட நசுக்கப்படுகிறது. உணவு மற்றும் உணவு அல்லாத செலவுகளைப் பூர்த்தி செய்து கொள்வது பிரச்சினையாக மாறியுள்ளது.

பொருட்களின் விலைகளில் ஏற்படும் சடுதியான அதிகரிப்பு, நாட்டு மக்களின் வாழ்வுரிமையைக் கூட மீறுகிறது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மனித வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்காகவும் ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்நிற்கிறது. அரசியலமைப்பில் தெளிவான மாற்றம் நிகழ்ந்து, மனித மற்றும் அடிப்படை உரிமைகள் பிரிவின் கீழ் வாழ்வதற்கான உரிமை, கல்வி, சுகாதாரம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமை ஆகியவை உள்ளடங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-7)

# காணிகளை விடுவிக்கக்கோரி 5 ஆவது நாளாகப் போராட்டம்



யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி நேற்றுப் புதன்கிழமை ஐந்தாம் நாளாக காணி உரிமையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டிருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இராசமாணிக்கம் சாணக்கியன், வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் ஆகியோரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-7,33)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 28 . 10 . 1950



உதிர்வு 22 . 06 . 2025

அமரர்

## சின்னத்தம்பி ரகுலேந்திரன் (ஸ்ரலீன்)

(ஓய்வுநிலை உள்ளூராட்சி திணைக்கள உத்தியோகத்தர்)

புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவரும், கணக்காய்வாளரும், கல்வியியலாளரும், சமூக செயல் வீரனும் தற்போது திருப்பணிச்சபை உறுப்பினர்களுள் ஒருவருமாகிய அமரர் சின்னத்தம்பி ரகுலேந்திரன் (ஸ்ரலீன்) அவர்களின் மறைவு ஆலய வளர்ச்சிக்கு மிகப்பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் மனைவி மற்றும் உற்றார் உறவினர் அனைவரக்கும் எமது ஆழ்ந்த துயரினை வெளிப்படுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பிகையை நாடுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஸ்ரீ முதலி (மனோன்மணி)
அம்பாள் தேவஸ்தானம்
புலோலி கிழக்கு. புலோலி.
பதிவு இல : HA/5/JA/420

(C-3270)

பிரிவால் துயருறும்
பரிபாலன சபை, திருப்பணிச்சபை
மற்றும் அடியார்கள், உபயகாரர்கள்,
[illegible]


# நானாட்டான் பிரதேச சபை தேசிய மக்கள் சக்தி வசம்

## தவிசாளராக அன்ரன் அன்று ராஜன்



மன்னார் நானாட்டான் பிரதேச சபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக அன்ரன் அன்று ராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்று புதன்கிழமை காலை 8.30 மணி அளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நானாட்டான் பிரதேச சபையில் நடைபெற்றது.

இதன் போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அன்ரன் அன்று ராஜன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஜெரோம் இருதயதாஸ் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டது.

இதன்போது சபையில்உள்ள 17 உறுப்பினர்களில் சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவர் வெளிநடப்புச் செய்தார்.

ஏனைய 16 உறுப்பினர்களும் கலந்து கொண்டு பகிரங்க வாக்கெடுப்பை கோரியிருந்தனர்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஜெரோம் இருதயதாஸ் 06 வாக்குகளையும்,தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அன்ரன் அன்று ராஜன் 10 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். அதி கூடிய வாக்குகளை பெற்ற தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அன்ரன் அன்று ராஜன் நானாட்டான் பிரதேச சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு,தொழிலாளர் கட்சி, சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவர், ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் ஆதரவை வழங்கி இருந்தன. உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஞானராஜ் சோசை போட்டியின்றி உப தலைவராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தையில் வீழ்ச்சியடைந்த எரிபொருட்களின் விலைகள்

(வோஷிங்டன்)

**மத்தியகிழக்கு மோதல்கள் முடிவுக்கு வந்த கையோடு, எரிபொருட்களின் விலைகள் உலக சந்தையில் வீழ்ச்சியுறத் தொடங்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**

வான் தடைகள் மற்றும் கடல்வழிப் பாதைகளுக்கு விதிக்கப்பட்ட தடைகள் நீக்கப்பட்டதால், ஸ்தம்பித்திருந்த சர்வதேச வர்த்தகம் வழமைக்கு திரும்பியுள்ளதாலே இவற்றின் விலைகளும் குறைந்துள்ளன.

இதன் பிரகாரம் ஒரு பீப்பா பிரெண்ட் மசகு எரிபொருள் சுமார் இரண்டு சதவீதம் குறைந்துள்ளது.

இதன்படி, ஒரு பீப்பா பிரெண்ட் மசகு எரிபொருளின் தற்போதைய விலை 67.13 அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாரசீக வளைகுடாவையும் ஓமன் வளைகுடாவையும் இணைக்கும் ஒரு குறுகிய கடல்வழியான ஹோர்முஸ் நீரிணையை, ஈரான் மூட தீர்மானித்ததினால், உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மனித உரிமை ஆணையாளர் திருகோணமலை விஜயம்

## போராட்டத்தில் குதித்த மக்கள்



(திருமலை)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஆணையாளர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதையடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அவசரமான மனித உரிமை நிலைமைகள் மற்றும் குறைபாடுகளை அவருடைய கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் அமைதியான முறையில் கவனயீர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நடவடிக்கையினை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம், சிவில் அமைப்புக்கள் மற்றும் வடக்கு கிழக்கு சமூக இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது கவனயீர்ப்பில் கலந்து கொண்டோரை மனித உரிமை உயர்ஸ்தானிகர் சந்தித்து கலந்துரையாடிய தோடு அவர்களிடமிருந்து மகஜர்களையும்பெற்றுக் கொண்டார். (நி)

# உரங்களைப் பதுக்கும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

## விவசாய பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உர இருப்புக்களை மறைத்து வைக்கும் வர்த்தகர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர், நாட்டில் உர பற்றாக்குறையை ஏற்படுத்த சிலர் முயற்சிப்பதாகத் தெரிவித்தார்.

சிறுபோகத்திற்கு நாட்டில் போதுமான உர இருப்பு உள்ளது

மேலும் 15,000 மெட்ரிக் தொன் உரத்தை நாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

# இலங்கையில் எரிபொருள் நெருக்கடி ஏற்படாது பெற்றோலிய கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் நிலவும் நெருக்கடி காரணமாக இலங்கையில் எரிபொருள் நெருக்கடி ஏற்படாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது.

2 மாத காலத்திற்கான எரிபொருள் கொள்முதல் கட்டளைகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்தார்.

இது குறித்து மேலும் பேசிய அவர், எந்த பிரச்சனையும் இல்லாமல் இன்னும் இரண்டு மாதங்களுக்கு எரிபொருளை ஆர்டர் செய்துள்ளோம்.

அந்த ஆர்டர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இன்னும் இரண்டு மாதங்களுக்கு இலங்கையில் எந்த காரணத்திற்காகவும் எரிபொருள் பற்றாக்குறை இருக்காது.

பின்னர் எங்கிருந்து எரி பொருளைப் பெறுகிறோம் என்பதுதான் பிரச்சினை.

பின்னர் போரின் தாக்கம் உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும்.

அதேநேரம், தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி, சட்ட விரோதமாக எரிபொருள் இருப்புக்களை குவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார். (நி)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய மணவாளக்கோல அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை வரை 28 நாட்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் தினமும் 12 மணிக்கு விசேட பூசையும் அன்னதானமும் மாலை 4.30 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும் 6 மணிக்கு வசந்த மண்டப பூசையும் வீதியுலாவும் நடைபெறும் என பூசகரும் பரிபாலகருமாகிய சிவஸ்ரீ ம.ஞானசேகரம் ஐயா அறிவித்துள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தாய்லாந்து ஓபன் தடகளப்போட்டி
## மலையகத்திற்கு பெருமை சேர்த்த வக்சான்

மலையகத்தின் தலவாகலைப் பகுதியைச் சேர்ந்த விக்னராஜ் வக்சான் சர்வதேச ஓட்டப் போட்டியொன்றில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

தாய்லாந்து பாங்காக் நகரில் நடைபெற்று வரும் தாய்லாந்து ஓபன் தடகளப் போட்டியில், இலங்கை தடகள வீரர் விக்னராஜ் வக்சான் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

அவர் 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்று 15 நிமிடங்கள் 56 வினாடிகளில் நிறைவு செய்து முதலிடத்தைப் பிடித்தார். வக்சானுக்கு இப்போட்டித் தொடரில் கிடைத்த இரண்டாவது பதக்கம் ஆகும். போட்டி ஆரம்பித்த முதல் நாளில் நடைபெற்ற 1,500 மீற்றர் ஓட்டத்தில், அவர் வெண்கல பதக்கம் வென்றிருந்தார்.



வக்சான் இதற்கு முன்னர் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்று தனது திறமைகளை வெளிப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## "பல வாய்ப்புக்களை தவறவிட்டோம்"
## தோல்வி குறித்து சுப்மன் கில்





இந்திய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்படி குறித்த போட்டியில் தோல்வியடைந்தது குறித்து இந்திய டெஸ்ட் அணித் தலைவர் சுப்மன் கில் கருத்து வெளியிட்டுள்ளார்.

"இந்த டெஸ்ட் போட்டி மிகவும் சிறப்பானதாக எங்களுக்கு அமைந்தது. எங்களுக்குப் பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் நாங்கள் பல பிடியெடுப்புகளை தவறவிட்டோம். அதுமட்டுமல்லாமல் எங்கள் அணியின் கீழ் வரிசை வீரர்கள் பெரிதாக ஓட்டங்களைக் குவிக்கவில்லை.இந்த இரண்டு விடயங்களால் நாங்கள் இந்த போட்டியை இழந்து விட்டோம்." என சுப்மன் கில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் குறித்த போட்டியில் இந்திய அணி 6 பிடியெடுப்புகளை நழுவவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(3)

## இந்தியா - இங்கிலாந்து முதலாவது டெஸ்ட் தொடர்
## இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்து அபார வெற்றி



இந்திய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 471 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் சார்பில் யசஷ்வி ஜெய்ஸ்வால், சுப்மன் கில் மற்றும் ரிஷப் பண்ட் ஆகியோர் சதம் கடந்தனர்.

இதனையடுத்து தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 465 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணியின் சார்பில் பொப் 106 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க பந்து வீச்சில் ஜஸ்பிறிட் பும்ரா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதற்கமைய 6 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 364 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள, இங்கிலாந்து அணிக்கு 371 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்தநிலையில் வெற்றி இலக்கை நோக்கி தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இதன்படி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது. (3)

## ஆஸ்ட்ராவா கோல்டன் ஸ்பைக் தொடர்
## சம்பியன் வென்றார் நீரஜ் சோப்ரா




ஆஸ்ட்ராவா கோல்டன் ஸ்பைக் சர்வதேச தடகள போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் "தங்க மகன்" நீரஜ் சோப்ரா சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த போட்டியில் முதல் மற்றும் கடைசி முயற்சிகள் புள்ளிகள் எடுக்காத நீரஜ் சோப்ரா, இடைப்பட்ட முயற்சிகளில் 83.45, 85.29, 82.17, 81.01 மீற்றருக்கு ஈட்டி எறிந்து அசத்தினார்.

அதில் மூன்றாவது முயற்சியில் 85.29 மீற்றருக்கு ஈட்டி எறிந்ததன் மூலம் நீரஜ் சோப்ரா சம்பியன் பட்டம் வென்றார்.

தென் ஆபிரிக்காவின் ஸ்மித் 84.12 மீற்றர் தூரமும் கிரெனடா நாட்டை சேர்ந்த ஆண்டர்சன் பீட்டர்ஸ் 83.63 மீற்றர் தூரமும் ஈட்டி எறிந்து முறையே 2 மற்றும் 3 ஆம் இடங்களை பிடித்தனர்.

முன்னதாக கடந்த வாரம் பாரிசில் நடைபெற்ற டயமண்ட் லீக் தொடரில் நீரஜ் சோப்ரா சம்பியன் பட்டத்தை வென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(3)

## டெஸ்ட் தொடரில் விதிமுறை மீறல்
## பண்டிற்கு எதிராக ஐ.சி.சி அதிரடி

இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் நடுவருக்கு அதிருப்தியை வெளியிட்ட இந்திய விக்கெட் காப்பாளர் ரிஷப் பண்டுக்கு ஒரு தகுதி இழப்புப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் நடத்தை விதிகளின் பிரிவு 2.8 இன் கீழ் பண்ட் முதல் நிலை தவறை செய்ததாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து ஒரு தகுதி இழப்பு புள்ளி அளிக்கப்பட்டுள்ளது. 24 மாதங்களில் அவர் பெற்ற முதல் தகுதி இழப்பு புள்ளியாக இது உள்ளது.


ஹெடிங்லியில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸை ஆடிக்கொண்டிருந்த போது இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதன்போது பந்தின் நிலை குறித்து கள நடுவர்களுடன் போல் ரைபல் மற்றும் கிறிஸ் கபனியுடன் பண்ட் உரையாடினார்.

எனினும் பந்தை மாற்றுவதற்கு நடுவர்கள் மறுத்த நிலையில் அதிருப்தி அடைந்த பண்ட் அவர்கள் முன்னே பந்தை தரையில் அடித்து கோபத்தை வெளியிட்டிருந்தார். இந்தத் தவறை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். இரண்டு ஆண்டுகளுக்குள் வீரர் ஒருவர் நான்கு அல்லது அதற்கு மேல் தகுதி இழப்புப் புள்ளிகளைப் பெற்றால் போட்டித் தடையை எதிர் கொள்ள வேண்டி ஏற்படும். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதை ஏற்க முடியாது!

## அருட்தந்தை மா.சத்திவேல்



**(நெளுக்குளம்)......................................**

**ஜனாதிபதி தமிழர்களை குற்றவாளி கூண்டில் நிறுத்துவதை ஏற்க முடியாது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"தையிட்டி விகாரைப் பிரச்சினையை அரசியல் கண்ணோக்கில் பார்க்கக் கூடாது. பிரஜைகளுக்கும், விகாரைக்கும் இடையிலான பிரச்சினையாக மாத்திரம் பார்த்தால் தீர்வினை பெற்றுக் கொள்ளலாம். அகற்றினால் பிரச்சனை வரும்" என அண்மையில் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய ஆலோசனை குழு கூட்டத்தில் ஜனாதிபதி கூறியிருப்பது அவரது தனிப்பட்ட கருத்து மட்டுமல்ல அவரது அரசாங்கத்தின் நிலைப்பாடாக மட்டும் கணிக்க முடியாது. அதனை சிங்கள, பௌத்த நிலைப்பாட்டில் என்று தமிழர்களை எச்சரிக்கும் தொனியாகவே நாம் கொள்ளலாம்.

அது மட்டுமல்ல அரச பயங்கரவாதம் சிங்கள பௌத்தத்தை கவசமாகக் கொண்டு தமிழர் தேசத்தில் முன்னெடுக்கும் சட்டவிரோத சமய ஆக்கிரமிப்புகளுக்கு திறந்த அனுமதி பத்திரமாகவே நாம் அடையாளப்படுத்த வேண்டும். இதுவா மாற்றத்தை நோக்கிய பயணம்? என இன நல்லிணக்கத்தையும் அரசியல் நீதியையும் விரும்பும் மக்கள் அமைப்புகள் தமது ஆதங்கத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தல் வேண்டும்.

தையிட்டியில் அரசியல் நோக்கம் கொண்டு இராணுவத்தால் சட்ட விரோத விகாரையினை சிங்கள பௌத்த பேரினவாத அரசின் துணையோடு வெற்றி அடையாளமாகவே கட்டி எழுப்பப்பட்டுள்ள நிலையில் அரசியல் நோக்கில் பார்க்க வேண்டாம் எனக் கூறி ஜனாதிபதி தமிழர்களை குற்றவாளி கூண்டில் நிறுத்துவதை ஏற்க முடியாது.

"விகாரைப் பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம்" எனக் கூறும் ஜனாதிபதி சிங்கள பௌத்த அரசியலை மையப்படுத்தி அவ்விகாரை பிரதேசத்தில் வேறெந்த கட்டடங்களோ அல்லது சிங்கள குடியேற்றங்களோ உருவாக்க மாட்டோம் என உறுதி கூறாது தவிர்த்தது ஏன்? அப்பிரதேசத்தில் தமிழர்களின் வாழ்விற்கும் பாரம்பரிய கலாசாரத்திற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் எதனையும் செய்யமாட்டோம் என உறுதி கூறாதது ஏன்? அதேபோன்று மாதந்தோறும்பௌர்ணமி தினங்களில் இறக்குமதி செய்யப்படும் சிங்கள பௌத்தர்களை குறித்து வாய் திறக்காது ஏன்?

தமிழர் தாயகத்தில் கண்டு பிடிக்கப்படும் சமூக புதைகுழிகள் இனப்படுகொலைக்கு சாட்சியாக உள்ளது போன்று சிங்கள பௌத்த தமிழின அழிப்புக்கு சாட்சியாக தையிட்டி விகாரை எழுந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் உயர்ஸ்தானிகர் வருகையோடு இடம்பெறும் அணையா விளக்கு போராட்டம் இனப்படுகொலைக்கு எதிராக தமிழர் தேசம் என்றும் விரிவடைய வேண்டும்.

அதேபோன்று சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெறும் பௌர்ணமி போராட்டமும் மக்கள் மயமாக வேண்டும். அதுவே தமிழர் தாயக அரசியலை நோக்கி மக்கள் மீள எழ வழி சமைக்கும் எனலாம் என மேலும் தெரிவித்தார். (8-299)

---

## மன்னாரில் தந்தை செல்வாவின் சிலை உடைப்பு- ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் நகர மத்தியில் மாவட்டச் செயலகத்திற்கு முன் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலை நேற்று புதன்கிழமை அதிகாலை இனம் தெரியாத நபர் களினால் உடைக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை முக்கியஸ்தர்கள் நேற்று புதன் கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தந்தை செல்வாவின் உருவச் சிலையில் காணப்பட்ட அவரது தலை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அவரது சிலைக்கு அருகில் இருந்து தலைப்பாகம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8-285)

---


## முதியோர் சங்கத்தின் மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புலோலி வட கிழக்கு J/408 முதியோர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு புலோலி வட கிழக்கு உத்தி ராவத்தை "ராஜன் பதி" அன்ன தான மண்டபத்தில் முதியோர் சங்கத் தலைவர் இ.கிருபாகரசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இக் கூட்டத்தன் போது. J/ 408 புலோலி வட கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்குரிய அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்கப்பட விருப்பதனால் குறித்த பிரிவில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு. முதியோர் சங்க தலைவர் இ.கிருபாகரசூரியன் தெரிவித்துள்ளார். (8)

---



செம்மணி புதைகுழிக்கு நீதிகோரிய "அணையா விளக்கு" போராட்டத்திற்கு கிளிநொச்சி வர்த்தகர்கள் ஆதரவு தெரிவித்து நேற்றையதினம் கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செம்மணி மனிதப் புதை குழியில் புதைக்கப்பட்ட வர்களுக்கு சர்வதேச நீதி கோரி "அணையா விளக்கு" என்ற கருப்பொருளில் அமைந்த போராட்டம் இறுதி நாளாக நேற்றைய தினம் உணர்வுபூர்வமாக இடம் பெற்றது.

(படங்கள்:-சிவசாந்தன்)

# பண்பாட்டு விழாக்களை
## கிராமங்களில் நடத்துவதே சிறந்தது
### ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


**தமிழர்களுக்கென்று தனித்துவமான பண்பாடு - கலாசாரம் - பழக்கவழக்கங்கள் உள்ளன. எந்தச் சூழ்நிலையிலும் அதை நாம் பாதுகாக்கவேண்டும். அவ்வாறு பாதுகாப்பதற்காகத்தான் பண்பாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகமும், பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்திய பிரதேச பண்பாட்டு விழா வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் நாடக கலைஞர் அமரர் செல்லையா சிவராசா அரங்கில் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இன்று இளங்கலைஞர்கள் உருவாகுவது அருகி வருகின்றது. எங்கள் பண்பாடுகளை அடுத்த தலைமுறைக்கு நினைவூட்டுவதுடன் இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் இவ்வாறான பண்பாட்டு விழாக்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

இன்றைய இளைய சமுதாயம் திசைமாறாமல் இருப்பதற்கு அவர்களை கலை நிகழ்வுகளை நோக்கி ஈர்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. அன்றைய நாட்களில் கிராமங்கள்தோறும் பல்வேறு கலை நிகழ்வுகள், கூத்துக்கள் நடைபெறும். இன்று அவையும் அருகிவிட்டன. இளையோரை ஊக்குவித்து அவற்றை மீண்டும் மிளிரச் செய்ய வேண்டும். இவ்வாறான பண்பாட்டு விழாக்களை கிராமங்களிலுள்ள அரங்குகளில் வைப்பது மிகச் சிறந்தது என்றார். (8)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கான பூர்வாங்க நிகழ்வாக நேற்று புதன்கிழமை அதிகாலை 6 மணிக்கு கீரிமலை காசி விஸ்வநாதர் ஆலயத்தில் இருந்து கீரிமலை - மாவிட்டபுரம் வீதி ஊடாக மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலுக்கு சகல உபச்சாரங்களுடன் கொடிப்புடவை ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது.

குறிப்பாக 35 வருடங்களின் பின் இந் நிகழ்வு இடம்பெற்று மாவைக் கந்தன் கொடியேற்றம் காணவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-சிவசாந்தன்)

# சட்டவிரோத மணல் அகழ்வு; மடக்கி பிடித்தது பொலிஸ்

(சாவகச்சேரி)

பளை பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தினை சாவகச்சேரி பொலிஸார் கனகம்புளியடி சந்தி பகுதியில் வழி மறுத்துள்ளனர்.

அதன் போது டிப்பர் வாகனத்தினை நிறுத்தாது, அதன் சாரதி டிப்பர் வாகனத்துடன் தப்பியோடியுள்ளார். அதனை துரத்தி சென்ற பொலிஸார் டிப்பர் வாகன சில்லுகளுக்கு ஆணிக்கட்டைகளை வீசியுள்ளனர்.

ஆணிகட்டைகள் டிப்பர் சில்லுக்குள் அகப்பட்டமையால் டிப்பர் வாகனத்தின் சில்லுகள் காற்று போன நிலையில், அதனை மேற்கொண்டு செலுத்த முடியாமல் போனமையால், டிப்பரை வீதியில் விட்டு விட்டு, சாரதியும் உதவியாளரும் அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

அதன் பின்னர் பலத்த சிரமங்களின் மத்தியில் டிப்பர் வாகனத்தினை மீட்டு பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர்.

தப்பியோடிய நபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (9-20-33)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ள 9 கியூப் மணல் எதிர்வரும் 28.06.2025 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாலாவி தெற்கு, கொடிகாமம் என்னும் முகவரியிலும் மற்றும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள சைக்கிள்கள், 201 கியூப் மணல், கல் என்பவை குறித்த தினத்தில் காலை 9.30 மணிக்கும் ஏலத்தில் விற்கப்படவுள்ளது.

எனவே குறித்த ஏலவிற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களான சைக்கிள்கள், கல் என்பவற்றைப் பார்வையிடலாம்.

பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும். ஏலத்தில் இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினையும் கல்லினையும் புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று எதிர்வரும் 05.07.2025 மற்றும் 12.07.2025 ஆம் திகதிகளில் நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (8)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 600 | 650 | 700 |
| தக்காளி | 350 | 350 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 | 220 | 240 |
| கோவா | 400 | 450 | 400 | 400 | 500 |
| கரட் | 800 | 450 | 450 | 650 | 500 |
| பூசணி | 150 | 160 | 170 | 150 | 150 |
| புடோல் | 120 | 100 | 200 | 130 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 120 | 180 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 | 450 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 280 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 400 | 250 | 380 | 400 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 520 | 600 |
| முருங்கைக்காய் | 1500 | 1100 | 1000 | 1300 | 1200 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 30-100 | 150 | 100 | 80 |
| தேசிக்காய் | 350 | 250 | 400 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 180 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 600 | 600 | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 180 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 200 | 200 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணிக்கு இன்று கொடி

## நற்கதி அருள்வாய் நயினை நாகபூஷணியே



இந்துமா கடலின் முத்தெனத் திகழும் ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாண நகரில் அறுபத்துநான்கு சக்திபீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தைத் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குவது நயினாதீவு ஆகும். இங்கு கோயில் கொண்டெழுந்தருளி உள்ள அன்னையவள் நாகமது பூசித்த நாக பூஷணியாக வீற்றிருந்து நாளும் நற் கருணை பொழிகின்றாள். அன்னையின் ஆலயத்தின் கிழக்குக் கோபுரம் அடிய வர்கள் அனைவரையும் கண்குளிரச் செய்கின்றது.

இதனையே இலங்கையினில் வடபாலே சோதியாகி **இலங்குகின்ற நாகபூஷணித்தாய்** தான் கோயில் கொண்ட **எழிலார் தீவு** என்ற பாடலடிகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

மதுரையில் மீனாட்சியாக, காசியில் விசாலாட்சியாக, காஞ்சியில் காமாட்சியாக விளங்கும் அன்னை, நயினையில் நாக பூஷணியாக அமர்ந்துள்ளாள். பொற்புறு நயினை தன்னில் பொலிவுடன் வீற்றிருந்து நற்கதி அளிக்கும் அன்னை யின் விசுவாவசு வருட மஹோற்சவப் பெருவிழா (2025) இன்று (26.06. 2025) வியாழக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினாறு தினங்கள் நடைபெற உள்ளது. எதிர் வரும் யூலை மாதம் 09ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை பூங்காவன உற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.

நாற்புறமும் கடல்சூழ்ந்த நயினை மண்ணில் அன்னையின் மஹோற்சவப் பெருவிழா ஆரம்பமாகின்றது என்றால் நயினையில் மட்டுமல்ல, ஈழத்தில் மட்டுமல்ல உலகெங்கும் அன்னையின் புகழ் ஓங்கி ஒலிப்பதைக் கேட்க முடியும்.

நாளும் கத்துகடல் தாண்டிக் கதறி வரும் அடியார்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற அம்பிகையாக அன்னையவள் மிளிரு கின்றாள்.

செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை விசேட தினங்கள் போன்ற நாட்களில் பக்தர்கள் கூட்டம் நிரம்பிவழிவதைக் காணமுடியும். எந்நாளும் ஆலயச் சூழலில் தீராதநோய் தீரவேண்டி வரும் அடியவர்கள், திருமாங்கல்யபாக்கியம் வேண்டி வரும் அடியவர்கள், மக்கட்பேறு வரம் வேண்டி வரும் அடியவர்கள் என்று தங்கள் பல்வேறு நேர்த்திக்கடன்களை நிறைவு செய்து செல்கின்றனர். அத்தனை அடியவர்களி னதும் குறைகளை அன்னையவள் நீக்கி நிறை வாழ்வளிக்கும் மாமருந்தாக விளங்குகின்றாள்.

இதனையே குமரகுருபர சுவாமிகள் அருளிய மீனாட்சி அம்மைப் பிள்ளைத் தமிழில் வரும் "பிறவிப் பெரும் பிணிக்கோர் மருந்தே வருக" என்ற அடி எமக்கு உணர்த்துகின்றது. நாளும் நாடித் தேடி வரும் அத்தனை அடியவர்களுக்கும் பசிப்பிணி நீக்கும் அன்னையாகவும், அன்னபூரணியாகவும் விளங்குகின்றாள்.

எம்மண்ணில் கலைகள் வளர, கவலை அகல, கருணை பொழிகின்ற அன்னையவள் நாகம்மையாக காட்சி கொடுக்கின்றாள்.

இதனை நயினைச் சுவாமியார் முத்துக் குமாரசுவாமிகள் எழுதிய

**"கற்பகக் கன்றைக் கடம்பனைத் தந்த கனகவரை**
**அற்புத மோனம் அருள் நாகம் தாங்கும் அமிர்தவல்லி**
**தற்பரன் வாமந்தழைத்தே சகல உயிர் கட்கும்**
**நற்பதிதனைப் பெற்ற சதானந்த நாகம் மையே"**

என்ற பாடல் எடுத்து விளக்குகின்றது.

அன்னையின் மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால் அகில உலகமெங்கும் உள்ள அன்னையின் குழந்தைகள் அனைவரும்

**"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்**
**நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"**

என்று மனம் உருகி அன்னையின் அழகுக் காட்சியைத் தரிசிக்க ஓடோடி வரு வதைக் காணமுடியும்.

அன்னையின் அழகுக் காட்சியைக் காண்பவர்கள் செஞ்சடையும் திருமுடியும் கண்டோமம்மா, செங்கதிர்வீசு உனது முகம் கண்டோமம்மா, தஞ்சமென வந்த திருவடி யார்க்குத் தகைபொழியும் திருவிழியும் கண்டோமம்மா, பஞ்சசிர செஞ்சரவக் குடையும் கண்டோம், பார்த்து மனம் களி கூர்ந்தோம் என்று பக்திப் பரவசத்தில் பாடு வதையும், ஆடுவதையும் ஆனந்தக் கண் ணீர் சொரிவதையும் காண முடியும்.

**"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை**
**என்றும் வணங்குவது உன் மலர்த்தாள்"**

என்ற அபிராமிப்பட்டரின் எண்ணக் கருவைச் சிந்தையில் நிறுத்தி மஹோற்சவ காலத்தில் அடியவர் கூட்டம் அலைகடல் தாண்டி மழைமுகில் போல் வருவதையும் காணமுடியும்.

மேலும் அன்னையவள் இன மத பேதமின்றி அனைவரையும் தன்பால் ஈர்க்கும் செயலால் நயினை மண்ணை சர்வமத சந்நிதியாக விளங்க வைத் துள்ளாள். நீலக்கடல் நடுவே நித்தமும் அமர்ந்திருந்து ஞாலத்திற்கு அருள் சுரக்கும் அன்னை ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து அகிலாண்டேஸ்வரி யாகவும் விளங்குகின்றாள். இத்தகைய மாங்காத புகழ் கொண்ட மணித்தீவின் தாயவளின் மஹோற்சவப் பெரு விழாவின் பதினாறு தினங்களும் அன்னையை மனதாரப் பூசித்து வணங்கி ஆலய தரிசனம் செய்து அருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**கௌரி விக்னராஜேஸ்வரன்**
**(நயினைச் செல்வி)**



## "கொடியேற்றி நல் விடிவொன்று தமிழருக்குத் தா தாயே"

அலைகடல் நடுவே வீற்றிருந்து அருள் பாலிக்கும் தாயே!
அடியவர்கள் குறைகள் அனைத்தும் போக்கும் தாயே!
அகிலத்தை ஆளும் நாயகியே நாகபூசணியே!
அமுதசுரபியே அன்ன பூரணியே- உன்தன்
கொடியேற்றம் காண அலைகடல் தாண்டி வந்தோம் தாயே!
கொடியேற்றி நல் விடிவொன்று தமிழருக்குத் தா தாயே!

**நயினை விசு- இராசநாயகம்**



## அம்மா நீயம்மா!

பொங்கும் கடலலையின்
பொலிவே நீயம்மா!
கொஞ்சும் குயிலிசையின்
குரலே நீயம்மா!
பொலியும் கதிர் ஒளியின்
பொலிவே நீயம்மா!
விளையும் அன்பின் - அடி
நாதம் நீயம்மா!
அழகின் தமிழமுதே
அம்மா நீயம்மா!
அள்ளக் குறைந்திடாத
அமுதசுரபி நீயம்மா!
என்னைத் தாங்கி நிற்கும்
உயிரே நீயம்மா!
ஏறும் கொடிதனிலே
எழிலே நீயம்மா!
ஏறி வந்திடுவாய் - ரதம்
எமை நீ காத்திடம்மா!

**பு.வர்ணஜன்**



## புகழ்பேச எழும் கொடி காண்போம்!!!

சினந்து எழாமல் சீரலைகள் சிரந்தாழ்த்த
நிரைந்து வீசாமல் கடற் காற்றும் கை கூப்ப
குளிந்து பொற்கதிரோன் மெதுவாக மேலெழவே
கசிந்து மனமுருகி அடியார்கள் விண்ணோக்க;
நாற்புறமும் நயினைத்தாய் புகழ்பரந்து வீசவே
ஏற்றமுறு கொடியொன்று எழுந்ததே காணீர்!
சாற்றுமுயர் கற்பகமாம் பர்வத வர்த்தனியைப்
போற்றிடும் நாளிங்கு சிறந்ததே அறிவீர்!!
நெடிதுயர் கொடியினால் பொடிபடும் துன்பம்!
அடியவர் மனங்களில் நிறைந்திடும் இன்பம்!
வடிவமர் கொடியமர் காமாச்சி கருணையால்
கடிமனங் கரைந்திடும் மிடிகளும் ஓடிடும்.
நாவினிக்க நயினையுற்ற நாயகியைப் பாடு
நற்கதியைத் தரும்நாக பூசணியை நாடு
பூமணக்கும் புகழ்மணக்கும் திருவடியைச் சூடு
புரந்தரியின் கரங்கொடுக்கும் அருளமுதைத் தேடு
கலமேறி உந்தன் தலம் நாடி வருவோர்
குலங்காக்கும் தெய்வம் நீயானாய் என்றே
மனங்கொண்டு நாளும் சரணடைந்தார் உன்னை
இனங்கண்டு அரவுதொழும் அபிராம வல்லியே!!

**இரா. தில்லைராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உதவிப் பொருட்களுக்காக காத்திருந்தோர் மீது இஸ்ரேல் துப்பாகிச்சூடு

- 25 பேர் உயிரிழப்பு
- 146 பேர் படுகாயம்



(ஜெருசலேம்)

காசாவில் உதவிப் பொருட்களை பெற உதவி மையத்தில் திரண்ட மக்கள் கூட்டத்தின் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

காசாவில் வாடி பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை, சலா அல்-தின் சாலையில் உதவிப் பொருட்களுடன் வரும் லொரிகளுக்காக காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் கொல்லப்பட்டனர். 146 பேர் படுகாயமடைந்தனர்.

லொறிகளை நெருங்க மக்கள் ஓடியபோது இஸ்ரேலியப் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்திய தாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த 146 பேரில் 62 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர்களுக்கு சிகிச்சை அளித்து வரும், நுஷ்ரைத் அகதி முகாமில் உள்ள அவ்தா மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இந்த உயிரிழப்புகள் மூலம் காசாவில் கடந்த ஒக்டோபர் 2023 முதல் இஸ்ரேலிய இராணுவ தாக்குதலில் உயிரிழந்த பாலஸ்தீனியர்கள் எண்ணிக்கை 56,000 ஐ கடந்துள்ளது.

இதில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



# போர் நிறுத்த... இஸ்ரேல், ... எச்சரித்த ...

(வோஷிங்டன்)

**போர்** நிறுத்தத்தை இஸ்ரே... ஈரானும் மீறியுள்ளன என அமெரிக்க ...திபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் இரண்டு வாரங்களாக நீடித்து வந்தன. இரு நாடுகளும் ஏவுகணைகளையும், ட்ரோன்களையும் வீசி தாக்குதல் நடத்தின. இதனிடையே இரு நாடுகள் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் இந்த அறிவிப்பை வெளியிட்டனர். இதனால், மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி திரும்பும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மோதல் தொடர்ந்து நடந்து வருகிறது.

இது தொடர்பாக நெதர்லாந்தில் நடக்கும் நேட்டோ அமைப்பின் மாநாட்டில் பங்கேற்க செல்லும் முன்னர் ட்ரம்ப் நிருபர்களிடம் கூறியதாவது, ஈரானும், இஸ்ரேலும் போர் நிறுத்தத்தை மீறியுள்ளன. ஒப்பந்தம் போட்ட உடன் இஸ்ரேல் குண்டுகளை வீசியது. நீண்ட காலமாக கடினமாக சண்டையிடும் நாடுகள் நம்மிடம் உள்ளன. என்ன செய்கிறார்கள் என அவர்களுக்கு தெரியவில்லை.

போர் நிறுத்த மீறலை வேண்டுமென்றே செய்ததாக தெரியவில்லை. இன்று இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது எனக்கு பிடிக்கவில்லை. அதனைத் தடுக்க முடியுமா என பார்ப்பேன்.



ஒப்பந்தம் போட்டதும் உடனே ஆயுதங்களை இஸ்ரேல் பயன்படுத்தியது பிடிக்கவில்லை. அவர்கள் ஆயுதங்களை பயன்படுத்த வேண்டியது

## அணு ஆயுதத்தை தயாரிக்க மீண்டும் முயற்சிக்கக் கூடாது!

### ஈரானை எச்சரித்த அமெரிக்கத் துணை ஜனாதிபதி

(வோஷிங்டன்)

அணு ஆயுதத்தை தயாரிக்க ஈரான் மீண்டும் முயற்சிக்க கூடாது என அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஜே.டி. வான்ஸ், "ஈரானின் அணு நிலையங்கள் மீதான எங்களது தாக்குதல், யுரேனியத்தை புதைப்பதை இலக்காக கொண்டு இருந்தது. யுரேனியம் புதைக்கப்பட்டுவிட்டது என்று நான் நினைக்கிறேன். ஈரானின் யுரேனியம் கையிருப்பை அகற்றவும், செறிவூட்டப்பட்ட எரிபொருளை அணு ஆயுதமாக மாற்றும் ஈரானின் திறனை அழிக்கவும் அமெரிக்கா விரும்பியது.

அதன்படி அமெரிக்கா தாக்கிய 3 செறிவூட்டல் நிலையங்களுக்கு அடியில் ஈரானின் யுரேனியம் கையிருப்பு புதைந்து போயிருக்கலாம்.

நாங்கள் ஈரானுடன் போரில் ஈடுபடவில்லை. ஈரானின் அணுசக்தி திட்டத்துடன் போரில் ஈடுபட்டுள்ளோம்.

அமெரிக்காவின் தாக்குதல்கள் ஈரானின் அணு ஆயுதத்தை உருவாக்கும் முயற்சிகளை கணிசமாக தாமதப்படுத்தியுள்ளன.

அது தான் தாக்குதலின் குறிக்கோளாக இருந்தது. அதை நிறைவேற்றி உள்ளோம். ஈரான் எதிர் காலத்தில் அணு ஆயுதத்தை உருவாக்க விரும்பினால் அவர்கள் மீண்டும் மிகவும் சக்திவாய்ந்த

அ... எதி... என்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...த்தை மீறிய

# ..., ஈரான்!

## ...் ட்ரம்ப்

...ரேலும்,
...கக ஜனா

இல்லை. பழிவாங்கல் அதிகமாக இருந்தது எனக்குப் பிடிக்கவில்லை. நியாயமாகச் சொன்னால், இஸ்ரேல் நிறைய ஆயுதங்களை பயன்படுத்தியது.

போர் நிறுத்தத்தை ஈரான் மீறியதாக இஸ்ரேல் நினைத்ததாக நான் கேள்விப்பட்டேன்.

இதனை நாங்கள் விரும்பவில்லை. இஸ்ரேலின் நிலைப்பாடு எனக்கு மகிழ்ச்சியை தரவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி)



அமெரிக்க இராணுவத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்" என்று தெரிவித்தார். (நி)



## சீனாவில் வரலாறு காணாத மழை 80,000 பேர் பாதிப்பு



(பீஜிங்)

சீனாவில் வரலாறு காணாத அளவுக்கு பருவமழை பெய்து வருகிறது. தொடர் மழையால் அந் நாட்டின் ஹுனான், ஹுபே மாகாணங்கள் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றன.

தெற்கு சீனாவில் உள்ள குய்சூ மாகாணம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. மழையால் ஏற்பட்ட வெள்ளம் குடியிருப்புகளை சூழ்ந்துள்ளதால் மக்கள் கடும் தவிப்புக்கு ஆளாகி இருக்கின்றனர். கிட்டத்தட்ட 80,000 மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

கோன்ஜியங், ரோன்ஜியங் நகரங்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன. அங்கு பாயும் ஆறுகளின் நீர்மட்டம் வெகுவேகமாக உயர்ந்து வருகிறது.

எனவே, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் ஏராளமான மக்கள் உடனடியாக வெளியேறுமாறு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்களை பத்திரமாக மீட்கும் பணிகளும் முழு வீச்சில் நடந்து வருகின்றன. (நி)

## மொசாட் அமைப்பினர் மூவருக்கு மரண தண்டனை



(டெஹ்ரான்)

இஸ்ரேலின் மொசாட் அமைப்பின் உளவாளிகள் என சந்தேகிக்கப்படும் மூவருக்கு ஈரான் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது என ஈரானின் தஸ்னிம் ஊடகம் இதனை தெரிவித்துள்ளது.

ஈரானிற்குள் கொலைகளை செய்வதற்கான சாதனங்களை கொண்டு வந்தவர்கள் என குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது

மதுபானங்களை நாட்டிற்குள் கொண்டுவருவது போல கொலை செய்வதற்கான ஆயுதங்களை நாட்டிற்குள் இவர்கள் கொண்டுவந்தனர் என ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## ரஷ்ய - உக்ரைன் போரையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்

## துருக்கி ஜனாதிபதி வலியுறுத்து

(வோஷிங்டன்)

ஈரான், இஸ்ரேல் போரை நிறுத்தியது போல், ரஷ்யா, உக்ரைன் சண்டையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று துருக்கி ஜனாதிபதி எர்டோகன், ட்ரம்பை வலியுறுத்தியுள்ளார்.

ஈரான், இஸ்ரேல் நாடுகள் இடையேயான போர் 12 நாட்களில் முடிவுக்கு வந்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் போர் நிறுத்தத்தை அறிவிக்க, அதை உலக நாடுகள் வரவேற்று வருகின்றன.

அந்தவகையில், அமெரிக்காவின் செயற்பாட்டை பாராட்டிய துருக்கி ஜனாதிபதி எர்டோகன், ட்ரம்பை நேரில் சந்தித்து போரை நிறுத்தியதற்கு பாராட்டு தெரிவித்தார். நேட்டோ உச்சி மாநாட்டின் போது ட்ரம்பை சந்தித்த அவர், போர் நிறுத்தத்தை வரவேற்பதாக தெரிவித்தார்.

காசாவில் நடந்து வரும் மனித உரிமைகளுக்கு மீறிய செயல்களை முடிவுக்கு கொண்டு வர ட்ரம்ப் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அத்துடன் ரஷ்யா, உக்ரைன் போருக்கு ட்ரம்ப் தீர்வு கண்டு அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று எர்டோகன் வலியுறுத்தினார்.

முன்னதாக, துருக்கி ஜனாதிபதி எர்டோகன் உதவியுடன் உக்ரைன், ரஷ்ய போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்று ட்ரம்ப் உறுதியளித்து இருந்தமை, குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல J/1594

## பதவி வெற்றிடங்கள்

பதிவு திகதி - 11.03.1972

### 01. பதவி - களஞ்சிய மேற்பார்வையாளர் (கிளை மேற்பார்வையாளர்) (02)

குறியீட்டு இல. - 207/10 (02/2022 இன் படி)
சம்பள அளவுத் திட்டம் - 19745 - 225X10-250X10-24495
பால் - ஆண்

**தகைமைகள் (01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கிளை மேற்பார்வையாளர்/ கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு** -

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 12.07.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சிய மேற்பார்வையாளர் (207/10) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி சாவகச்சேரி" எனும் முகவரிக்கு 12.07.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

### 02. பதவி - உள்ளகக் கணக்காய்வாளர் (01)

குறியீட்டு இல. - 105/07 (02/2022 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 21125-275X10-300X10-26875
பால் - ஆண்/பெண்

**தகைமைகள் (01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமைநிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமைநிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆக குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுத் துறையில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு:-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

**விண்ணப்ப முடிவு திகதி 12.07.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உள்ளகக் கணக்காய்வாளர் (105/07) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி சாவகச்சேரி" எனும் முகவரிக்கு 12.07.2025ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்

### 03 பதவி - அங்கத்தவர் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் (01)

குறியீட்டு இல - 123/05 (02/2022 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 22970-350X10-390X10-30370
பால் - ஆண்/பெண்

**தகைமைகள் (01/2021 இன்படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 6 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 7 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்/ அதற்குச்சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல் / வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம் / வியாபாரம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைய பதவியில் ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கற்பித்தல் துறையில் ஆகக் குறைந்தது 08 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு:-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 12.07.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் அங்கத்தவர் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்(123/05) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி சாவகச்சேரி" எனும் முகவரிக்கு 12.07.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

### 04. பதவி - களஞ்சியப் பொறுப்பாளர் (01)

குறியீட்டு இல - 202/09 (02/2022 இன்படி))
சம்பள அளவுத் திட்டம் - 20200-250X10-260X10-25300
பால் - ஆண்

**தகைமைகள்: (01/2021 இன்படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/ கிளை மேற்பார்வையாளர்/ கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வழங்கல்/ களஞ்சிய முகாமை/சந்தைப்படுத்தல் முகாமை தொடர்பான டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வரத்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 12.07.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சியப் பொறுப்பாளர்(202/09) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி சாவகச்சேரி" எனும் முகவரிக்கு 12.07.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**தலைவர் திரு.சி.சுதர்சன்.**

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம், டச்சு வீதி,
சாவகச்சேரி. 26.06.2025

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசகத்தில் சிறுவர்களை ஈடுபடுத்த தடை

## ஜூலை முதல் சட்டம் அமுல்

(கொழும்பு)

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களை யாசகத்தில் ஈடுபடுத்தல் மற்றும் 18 வயதிற்கு இடைப்பட்டவர்களை வீட்டுப் பணி உள்ளிட்டவற்றில் ஈடுபடுத்துவதைத் தடைசெய்யும் சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் குறித்த சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை யாசகத்தில் ஈடுபடுத்தல், அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதை 2025.07.01 ஆம் திகதி தொடக்கம் முழுமையாகத் தடைசெய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (நி)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (1254)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

Western Union WU MoneyGram Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெறுகக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974


10 ஆம் பக்க தொடர்ச்சி...

### சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதவி - தொழிலாளி (03)**
குறியீட்டு இல -318/17 (02/2022 இன்படி )
சம்பள அளவுத் திட்டம் 16515-130X10-145X10-19265
பால்-ஆண்/பெண்

**தகைமைகள் (01/2021 இன்படி)**

அ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு :-

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 12.07.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழிலாளி (318/17) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி" எனும் முகவரிக்கு 12.07.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி,சாவகச்சேரி.
26.06.2025 (சி-3265)

பணியாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்-திரு.சி.சுதர்சன்

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
### பதவி வெற்றிடம்- நிரந்தரம்

**01. பதவி - களஞ்சிய முகாமையாளர்/கிளைமுகாமையாளர் (வெற்றிடம் 10)**
**குறியீட்டு இல :- 208/14**
**சம்பள அளவுத் திட்டம் :- 02/2025 சு.நி.படி 32900-40100**
**355 x 10-365 x 10**
**பால் :- ஆண்/பெண்**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:- (01/2021 இன்படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./

க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாயின் 18-45 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 09.07.2025**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், சேவைச்சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் அடையாள அட்டைப்பிரதி இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கிளைமுகாமையாளர் (208/14) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து), சங்கானை" எனும் முகவரிக்கு 09.07.2025 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை.**
(C- 3264) **021-225-0126**

# இராசிபலன்

26.06.2025
ஆனி 12, வியாழக்கிழமை
பிரதமை பிற்பகல் 3.25 மணிவரை
திருவாதிரை முற்பகல் 10.50 மணிவரை

சுப நேரம் 7.25-8.55 மணிவரை
இராகுகாலம் 1.25-2.55மணிவரை
போதைப்பொருள் ஒழிப்பு தினம்

சந்திராஷ்டமம்- அனுசம், கேட்டை
நயினை அம்பாள்,
தான்தோன்றீஸ்வர கொடி

**வளவன்**




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.போசன சுகமுண்டு.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, ஆனந்தமான நாள்.




எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்படலாம்.




பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், சயனசுக குறைவுகள் ஏற்படலாம்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.




நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டை சிரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே நல்லது.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.




பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், இனிமையான நாள்.




வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வாகன சுகத்தால் வளம் காணும் நாள்.

அயராத உழைப்பே உண்மையான மேதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர்

806



"இல்லை அக்கா! உங்களைப் பார்த்தால் எனக்கு வெகு நாட்கள் பழக்கமான தோழி மாதிரியே தோன்றுகிறது. யாரிடமும் சொல்லாத விடயத்தைத் தங்களிடமும் சொல்லும்படி என் உள்ளம் தூண்டுகிறது. யாரிடமும் கேட்கக் கூடாத காரியத்தைத் தங்களிடம் கேட்கும் தைரியமும் உண்டாகிறது" "அப்படியானால் கேளடி, கண்ணே!"

"உருவெளித் தோற்றம் என்று கதைகளில் சொல்லுகிறார்களே, அது உண்மையாக ஏற்படக் கூடுமா, அக்கா? நம் எதிரில் ஒருவர் இல்லாதபோது அவர் இருப்பது போலவே தோன்றுமா?"

"சில சமயங்களில் அப்படித் தோன்றும் ஒருவரிடம் நாம் அதிகமான ஆசை வைத்திருந்தால், அவருடைய உருவம் எதிரில் இல்லாவிட்டாலும் இருப்பது போலத் தோன்றும். ஒருவரிடம் அதிகமான துவேஷம் வைத்திருந்தால் அவருடைய உருவமும் தோற்றம் அளிக்கும், மாயக் கண்ணனுடைய கதை நீ கேட்டதில்லையா, மணிமேகலை? ஏன்? நாடகம் கூடப் பார்த்திருப்பாயே? கம்ஸனுக்குக் கிருஷ்ணன் பேரில் ரொம்பத் துவேஷம். ஆகையால் கண்ட இடமெல்லாம் கிருஷ்ணனாகத் தோன்றியது. கத்தியை வீசி வீசி ஏமாந்து போனான். நப்பின்னை என்னும் கோபிகைக்குக் கண்ணன் மீது ரொம்ப ஆசை. அவளுக்கும் கண்ணன் உருவம் இல்லாத இடத்திலெல்லாம் தோன்றுமாம். தூணையும், மரத்தையும், நதியின் வெள்ளத்தையும் கண்ணன் என்று கட்டித் தழுவிக் கொள்ளப் போய் ஏமாற்றமடைவாளாம்! அடியே, மணிமேகலை, உன்னை இந்த மாதிரி மயக்கி விட்ட மாயக் கண்ணன் யாரடி?"

"அக்கா! முதன் முதலாக நாலு மாதத்துக்கு முன்னால் தான் அவரை நான் நேரில் பார்த்தேன். அதற்கு முன்னால் என் தமையன் கந்தமாறன் அவரைப் பற்றி அடிக்கடி சொல்லி இருந்தான். அப்போதெல்லாம் அவர் உருவம் என் கண் முன் தோன்றுவதில்லை. ஒரு தடவை பார்த்த பிறகு அடிக்கடி என் கனவில் தோன்றி வந்தார். பகலிலும் சில சமயம் எதிரில் அவருடைய உருவம் நிற்பது போலிருக்கும்."

"நேற்றுக்கூட அந்த மாயாவியின் உருவெளித் தோற்றத்தை நீ கண்டாய் அல்லவா?" "ஆம், அக்கா! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" "என்னிடம் மந்திர சக்தி உண்டு என்பதைப் பற்றி உனக்கு யாராவது சொல்லவில்லையா?"

"ஆம் சொன்னார்கள் அது உண்மைதானா, அக்கா?"

"நீயே பரீட்சித்துத் தெரிந்து கொள் உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த யௌவன சுந்தர புருஷனை யார்என்று வேண்டுமானால், என் மந்திர சக்தியினால் கண்டு சொல்லட்டுமா!" "சொல்லுங்கள், பார்க்கலாம் எனக்கும் அவர் பெயரைச் சொல்லக் கூச்சமாயிருக்கிறது."

நந்தினி சிறிது நேரம் கண்ணிமைகளை மூடிக் கொண்டிருந்துவிட்டுத் திறந்து "உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஆசைக் காதலன் வாணர் குலத்தில் வந்த வல்லவரையன் வந்தியத்தேவன்! இல்லையா?" என்றாள்.

"அக்கா! உங்களிடம் மந்திர சக்தி இருப்பது உண்மைதான்!" என்றாள் மணிமேகலை. "அடி பெண்ணே! எப்போது உன் உள்ளத்தை அவ்வளவு தூரம் ஒருவருக்குப் பறிகொடுத்துவிட்டாயோ, அப்போது ஏன் உன் தமையனிடம் அதைப் பற்றிச் சொல்லவில்லை?

(தொடரும்...)

## பன்றிநெல்லைக் கட்டுப்படுத்துவோம் விழிப்புணர்வு நிகழ்வு

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதி வயல் பகுதியில் காணப்படும் பன்றி நெல்களை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு செயற்பாடானது நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய காலங்களாக பன்றி நெல்லினால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனை கட்டுப்படுத்தும் நோக்கோடு விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் மந்துவில் மற்றும் கோம்பாவில் விவசாயப் போதனாசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் கைவேலி வயல்பகுதியில் இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வின் போது பன்றி நெல் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் பன்றி நெல்லின் தாக்கம் மற்றும் கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமம் தொடர்பாக விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் முல்லைத்தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனை பாடவிதான உத்தியோகத்தர் நிறஞ்சன்குமார், மந்துவில் விவசாய போதனாசிரியர் பிரசாந்தன், கோம்பாவில் விவசாய போதனாசிரியர் மதுசியா, கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (8-299)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி ஜெ.பாலமயூரா
அவர்களின் மாமனார்

திரு. சிவஞானம் பாலேந்திரன்

அவர்கள் 19.06.2025 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(f-3266)

## அற்புதங்களின் நினைவு நாள்



அமரர்.
செல்வஜோதி பொன்னம்மா
[மடத்து ஆச்சி-1909-2000]



அமரர்.
கதிர்காமர் வேலுப்பிள்ளை செல்வஜோதி
[Rtd.Railway station Master.Malaysia]
ஸ்தாபகர்:-ஜோதி ஆச்சிரமம்
[1891-1962]



அமரர்.
செல்வஜோதி கதிரவேற்பிள்ளை
[மூத்தகுலப்புதல்வர்-1927-1998]

க. மலேசியாவில் க.வே.செல்வஜோதியை 2 ஆம் உலக யுத்தத்தின் போது பாதுகாத்து (1939-1945) "ஜோதி ஆச்சிரமம்" அமைக்க வைத்த கந்தன் (1949-1956)

உ. க.வே.செல்வஜோதியின் மைத்துனி, கந்தன் தேர் உற்சவத்தில் சண்முகப் பெருமான் முன்னிலையில் (வடக்கு வீதி) "குபேர சந்தி" யில் "சிவஉலகு" அடைவதை முற்கூட்டியே சிவயோக சுவாமிகளிற்கு அறிய வைத்த கந்தன் (...1956....) (சிவதொண்டன்.2014 மார்ச்- யூன் பக்கம் 59)

ங. இந்திரமயிலின் மீதமர்ந்த உலகப் பெரும் சண்முகப் பெருமான் தனது நைவேத்தியப் பணிக்கு இடையூறாக விடப்பட்ட சப்பறத்தினை நள்ளிரவிலேயே "வாயு பகவான்" மூலம் வழமையான இருப்பிடம் நோக்கி நகர்த்தி ஜோதி ஆச்சிரம நைவேத்தியவழிபாட்டை ஏற்றுக் கொண்ட கந்தன். (1956).

ச. தனது இரதோற்சவ தினத்தன்றே - அருணகிரிநாதரின் குருபூசை தினத்தன்று அடியேனுக்கு உயிர் ஊட்டி உயிர்காத்து (1966), ஆட்கொண்டு (விற்று- வாங்கல்-1969) முருகா-பழனி எனும் முருக பக்தர்(ஆ. கிருஷ்ணபிள்ளை) மூலம் தெற்கு வீதி மணல் தேய்த்துக் குளிப்பாட்டி, "பாலாவி" யில் அறிவூட்டி, பிரதம குருவுடன் யுத்தத்தில் பாதுகாத்து (1984-1990) மணமுடித்து- குழந்தை வரமளித்து; விபத்தில் உயிர் காத்து (2014), நீதிமன்றில் வம்சத்தை மிளிர வைத்து (2019), மாரடைப்பில் உயிர் நீடித்த (2021-2022) கந்தன்.

ரு. தீர்க்க தரிசியாம் செல்வஜோதியின் ஆலயத்திற்கான மின்சாரம் வழங்கும் கோரிக்கையை (1955) எமக்கு அறிய வைத்து ஜோதிஆச்சிரமத்திற்கு மின் இணைப்புப் பெற வழிகாட்டிய கந்தன் (2013).

சா. தனது துவஜாரோகண தினத்தில் "ஸ்தாபகரை" "சிவ உலகு" க்கு அழைத்தும் இரதோற்சவ தினத்தில் "பிரிய மகள்" வழிப் பேரனை "சிவ உலகிற்கு" அளித்தும், பெருமைகளை நிகழ்த்தி பெருமைமிகு பொலிகண்டி சிவன் ஆலயத்தின் வரலாற்றினையும் பெருமையினையும், அறிய வைத்து தேரடியை அடைந்து தேரில் இருந்தவாறே சிவன் ஆலய ஆவுடையாரை விரிவுரையாளர் எடுத்துள்ளமையைக் கூறவைத்து திருவிளையாடல் புரிந்த உலகப் பெரும் சண்முகப் பெருமான். (2018)

- "பேசாதிருந்த" எமது தம்பியாம் "திருஞான சோதி" (அமரர்) யையும் "பேச வைத்த" (1971) நயினை அன்னையின் கதிர்காமம் - கந்தனின் கொடியேற்ற தினத்தில் கந்தனின் அற்புதங்களை நினைவுடன் பகிர்ந்து... (1246)

சிவன் கோவிலடி, கந்தவனக்கடவை (1803)
வல்வெட்டித்துறை

த.செல்வசோதி
நம்பிக்கைப் பொறுப்பாளர், ஜோதி ஆச்சிரமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்பது சூரியனைப் போன்றது, அதன் பிரகாசம் சதா வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆணையாளரின் செம்மணி வருகை மன ஆறுதலைத் தருகின்றது

யாழ்ப்பாணத்துக்கு நேற்று (25) வருகை தந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் செம்மணி மனிதப் புதைகுழி உள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டமை மன ஆறுதலைத் தருகிறது.

ஆம், செம்மணிப் புதைகுழிக்கு நீதி வேண்டி மக்கள் முன்னெடுத்த அணையா விளக்கு அகிம்சைப் போராட்டத்தையும் நேரில் பார்வை யிட்ட ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீர்க் கதை யைச் செவிமடுத்ததன் மூலம் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் செம்மணிக்குச் சென்று பார்வையிடுவதற்கு எந்தத் தடையு மில்லை என்ற அநுர அரசாங்கத்தின் அறி விப்பு உண்மையில் வரவேற்கப்பட வேண்டி யது.

நாட்டில் நிரந்தர அமைதி நிலை நாட்டப்பட வேண்டுமாயின், பாதிக்கப்பட்ட அத்தனை மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

அந்தவகையில் செம்மணிப் புதைகுழி விவகாரம் எங்கள் தமிழ் மக்களின் அவலத்தோடு தொடர்புபட்டது.

அதற்கும் மேலாக, குறித்த பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதி என்பதும் தெரிந்ததே.

நிலைமை இதுவாக இருக்கையில், கடந்த கால ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமையை – அட்டூழியத்தை வெளிப் படுத்தும்போதுதான் சமகால அரசாங்கம் அனைத்து இன மக்களையும் சமமாக நடத்து கிறது என்ற கருத்தியல் ஏற்படும்.

உண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் தவிர்ந்த வேறெந்த அரசாங்கம் இருந்திருந்தாலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரை யாழ்ப்பாணம் செல்வதற்குக்கூட அனுமதித் திருக்கமாட்டா.

ஆனால் அநுர அரசு யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்ல, செம்மணிப் புதைகுழி உள்ள இடத் துக்கும் ஆணையாளர் செல்வதற்குத் தடை விதிக்காமை அநுரவின் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே எல்லோரையும் எதிர்ப்பது என்றில்லாமல், நிலைமைகளை உற்று அவதானித் துச் செயற்படுவதன் மூலமே எங்களுக்கான நீதியை – உரிமையை வென்றெடுக்க முடியும்.

உண்மை. கடந்த கால ஆட்சியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், செம்மணிப் புதைகுழி விவகாரத்தைச் சர்வதேச மட்டத்தில் பேசுபடுபொருளாக்க வேண்டும்.

அதனைச் செய்வதில் அநுர அரசாங்கம் முனைப்புக்காட்டும்போது, அதற்கு எங்கள் தரப்பிலிருந்து சாதகமான சமிக்ஞைகள் தென்படவேண்டும்.

ஆகையால் எங்கள் மக்கள் பட்ட துன்பத் துக்கு நீதி கேட்டுப் போராடும்போது, அதனை எந்தவகையிலும் அரசியலாக்கி நிலைமையை பழுதடையச் செய்யாமல் பார்த்துக் கொள்வது எங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை.

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச கண்காணிப்பு அத்தியாவசியமானது

### மனித உரிமை ஆணையாளரிடம் எடுத்துரைத்த சட்டத்தரணிகள்

சர்வதேச கண்காணிப்புடன் செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை செம்மணி மனிதப் புதைகுழி வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க்கிடம் எடுத்துரைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று புதன்கிழமை விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் செம்மணிப் புதைகுழி காணப்படும் இடத்திற்கு நேரில் சென்று புதைகுழிகளைப் பார்வையிட்டார்.

அதன் பின்னர் புதைகுழி வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளிடம் நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டார். அதன்போதே சட்டத்தரணிகள் அவ்வாறு தெளிவுபடுத்தினர்.

அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க்கிடம் தாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் சட்டத்தரணிகள் ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு பணிக்கான நிதியினை அரசாங்கம் தங்கு தடையின்றி விடுவிக்க வேண்டும். அதற்கான அழுத்தத்தினைக் கொடுக்க வேண்டும்.

மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்களைச் சரியான முறையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். தற்போது மீட்கப்பட்டவற்றை கொழும்புக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவையுள்ளது.

ஏனெனில் யாழ்ப்பாணத்தில் அதற்கான வசதிகள் இல்லை. எனவே எச்சங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் அதன் மீதான சோதனைகளை முன்னெடுக்க ஏதுவாக ஆய்வு கூடமொன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டும் . அது பல விடயங்களில் பயனுள்ளதாக இருக்கும்.

அகழ்வாராய்ச்சிக்கான தொழில்நுட்ப வசதிகள் தேவையாகவுள்ளது. அதே நேரம் நிபுணத்துவ மிக்க நிபுணர்கள் வேண்டும். நிபுணர்களின் பங்கேற்புடன் சர்வதேசக் கண்காணிப்புடன் இதன் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என எடுத்து கூறியுள்ளோம் எனத் தெரிவித்தனர். (ம-7,33)

## க.பொ.த உயர்தரப் பரீட்சை நவம்பர் 10 ஆம் திகதி ஆரம்பம்

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் டிசெம்பர் 05ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் ஒரு அறிக்கையை வெளியிட்டு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. இது தொடர்பில் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது,

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான ஒன்லைன் விண்ணப்பங்கள் ஜூன் 26 முதல் ஜூலை 21 வரை ஏற்றுக் கொள்ளப்படும். பாடசாலை மாணவர்கள் தங்கள் அதிபர்கள் மூலமாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அதே நேரத்தில் தனியார் மாணவர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை (NIC) எண்ணைப் பயன்படுத்தி சுயாதீனமாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். (ம-7)

## வலி.மேற்கு பிரதேச சபையின் ஆதன மதிப்பீட்டு பணியாரம்பம்

### தவிசாளர் ஜெயந்தன் தெரிவிப்பு

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களை மீள் மதிப்பீடு செய்யும் பணி, விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர் சங்கானை உப அலுவலகத்துக்குட்பட்ட ஆதனங்களை மீள் மதிப்பீடு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சுழிபுரம், வட்டுக்கோட்டை உப அலுவலகங்களுக்குட்பட்ட ஆதனங்களின் மதிப்பீட்டுப் பணிகள் நாளை (இன்று) ஆரம்பமாகும் என்றார்.

மேலும் இவ் மதிப்பீட்டுப் பணிக்கு பொது மக்கள் தமது பூரண ஆதரவை நல்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்ப்பட்டப்படிப்புகள் பீடத்தின் வெள்ளி விழா நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்ப்பட்டப்படிப்புகள் பீடத்தின் 25ஆவது நிறைவை சிறப்பிக்கும் வண்ணம் பீடப்பழையமாணவர்கள் உயர்ப்பட்டப்படிப்புகள் பீடத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வெள்ளிவிழா நிகழ்வானது இன்று வியாழக்கிழமை மாலை 2.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைத்துள்ள கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆய்வுச் சஞ்சிகை வெளியீடு, "காவியப் பாத்திரங்கள் நம் களநிலையைப் போலுற்றால்.." எனும் தலைப்பில் கவியரங்கம், நினைவுச்சுவடு வெளியீடு, பழைய மாணவர்களின் உள்ளப்பதிவு, நடனம், வில்லுப்பாட்டு, இசையரங்கமும் இராப்போசனமும் எனப் பல்சுவை நிகழ்ச்சிகள் அரங்கேறவுள்ளன. (ம-7)

### மரம் தறிக்க ஒரு இலட்சம்

## இலஞ்சம் கோரிய அதிகாரிக்கு 22 ஆண்டுகள் கடூழியச் சிறை

(தம்புத்தேகம)

தம்புத்தேகம மகாவலிப் பகுதியிலுள்ள நிலத்தில் மரம் வெட்டுவதற்கான அனுமதிகளை வழங்குவதற்காக ஒரு இலட்சம் ரூபாவை இலஞ்சம் கோரியதற்காக முன்னாள் காணி அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று 22 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது .

மேலும் பிரதிவாதிக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் இலஞ்சத் தொகையை அபராதமாக வசூலிக்கவும் அபராதம் செலுத்தப்படாவிட்டால் மேலதிகமாக ஒரு வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸ்ஸங்க இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மீண்டும் தலை தூக்குகிறது துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம்

### நேற்றும் இரு இளைஞர்கள் பலி

நாட்டில் சிலவாரங்களாக மௌனித்திருந்த துப்பாக்கிக் கலாசாரம் தற்போது மீளத் தலை தூக்க ஆரம்பித்துள்ளது.

மித்தெனிய தொரகொலயாப் பகுதியில் நேற்று (25) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் மித்தெனிய பொலிஸாருடன் இணைந்து மூன்று விசேட விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 14

புருசோத்தமன்

புதுச்சேரியில் பத்து ஆண்டுகள் பாரதியார் அடைக்கலம் புகுந்திருந்தார் என்பதற்குள் அந்தப் 10 ஆண்டுகளும் பாரதியாருக்கு மிகவும் மகிழ்வான காலமாகக் கடந்திருந்தது என்பதை புதுவையில் இருந்த போது அவர் எழுதிய குயில் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பாப்பாட்டு, பெண் விடுதலைப் பாடல்கள் போன்றன உறுதி செய்கின்றன.

கூடவே புதுவை மணக்குள விநாயகர் பற்றிய பாரதியாரின் பாடல்களும் புதுவையின் சிறப்பைக் காட்டி நிற்கின்றன.

இத்துணை சிறப்புமிக்க புதுவையில் மக்கள் மிகவும் மனநிறைவோடு வாழ்வதை அவர்களின் அகத்தழகு முகத்தினூடு உறுதி செய்கின்றது.

இஃது ஒரு புறமிருக்க, அங்கு மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கின்றவர்கள் எவருமே தலைக்கவசம் அணிவதில்லை.

சிலவேளைகளில் தலைக் கவசம் அணிவது அங்கு கட்டாயப் படுத்தப்படாமல் இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றும்.

தவிர, மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துகின்றவர்கள் வீதி நடைமுறைகளைப் பின்பற்றுவதும் சற்றுக் குறைவென்றே சொல்ல வேண்டும்.

இதன் காரணமாகவோ என்னவோ கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் நான் செல்கின்ற இடங்களுக்கு அன்பர் வேல் பாண்டியை என்னோடு அனுப்பி வைத்தார்.

வேல்பாண்டியின் வேக நடைக்கு என்னால் ஈடு கொடுக்க முடியாமல் போன சந்தர்ப்பங்களும் உண்டு.


எனினும் வேல்பாண்டியின் ஆறுதலான மொழிநடையும் தெளிவான சொல்லாட்சியும் தமிழகத்துத் தமிழை என்னால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

அவரின் வேகநடை காரணமாக புதுச்சேரியில் உள்ள கடைத் தெருக்களை விரைந்து பார்க்கின்ற சந்தர்ப்பமும் கிடைத்ததெனலாம்.

அந்தக் கடைத் தெருவில் உள்ள மருந்துக் கடை ஒன்றுக்குச் சென்றிருந்தோம்.

பூசைக்குப் பொருட்கள், பட்டுத் துணிகள் என ஆலயப் பூசை வழிபாடுகளுக்குத் தேவையான அபிஷேகப் பொருட்கள் என அனைத்தும் ஒருங்கே காணப்பட்டன.





அதைவிட, குறித்த மருந்துக் கடை மிகவும் நேர்த்தியான ஒழுங்குபடுத்தலுடன் காணப்பட்டது.

தவிர, அங்குள்ள திருநீறு, சந்தனம், குங்குமம் என்பன மிகவும் தரம் வாய்ந்தவையாக இருப்பதை அவதானிக்க முடிந்தது.

அந்தத் தரத்தில் அவற்றை எங்கள் யாழ்ப்பாணத்தில் காண்பது கார்த்திகை மாத்து மூன்றாம் பிறைக்கு ஒப்பானது.

இதற்கும் மேலாக, பூசைப் பொருட்கள் மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அங்கு விற்பனையாகின்ற பன்னீரின் தரம் கண்டு திகைத்துப் போனேன்.

அந்தளவிற்கு பன்னீர் பன்னீராக இருந்தது.

இவை பற்றி இங்கு பிரஸ்தாபிப்பதன் நோக்கம், எங்கள் மருந்துக் கடை உரிமையாளர்களும் தரமான பூசைப் பொருட்களை தருவித்து விற்பனை செய்ய வேண்டும் என்பதே.

இறைவழிபாட்டிற்குப் பயன்படுகின்ற பூசைப் பொருட்கள் தரமானவையாக இருக்கின்றபோது, அங்கு நறுமணம் சூழ்ந்து தெய்வீகத் தன்மை ஏற்படும்.

இது விடயத்தில் நம் மருந்துக் கடை உரிமையாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவில் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகின்ற குங்குமம், சந்தனம் போன்ற பிரசாதப் பொருட்களை சில மாதங்களுக்கேனும் வைத்திருக்க முடிவதில்லை.

அவை இலகுவில் பழுதடைந்து போகின்றன.

இது பற்றியும் நம்மவர்கள் கவனம் செலுத்துவது கட்டாயமானது.

**தமிழகத்தின் சாயல்**

புதுச்சேரி தனிமாநிலமாக இருந்தாலும் தமிழர் தேசம் என்பதாலும் தமிழகம் அதன் எல்லை என்பதாலும் தமிழகத்தின் பண்பாடுகள் புதுச்சேரியிலும் முழுமையாக இளையோடி இருப்பதைக் காண முடியும்.

அதிலும் தமிழகத்தின் அரசியல் கலாசாரம் அப்படியே புதுச்சேரியிலும் பரிண மிக்கின்றன.

ஆம்,தமிழகத்தில் எங்கனம் அரசியல் தலைவர்களின் பதாகைகள் காட்சிப்படுத்தப்படுகின்றனவோ, திருமண விழாக்களிற்கு வருகை தருகின்ற அரசியல் தலைவர்களின் புகைப் படங்கள் அடங்கிய பிரமாண்டமான கட்டவுட்டுகள் பார்வைக்கு வைக்கப்படுகின்றனவோ, அதுபோல புதுச்சேரி முழுவதிலும் அரசியல் தலைவர்களின் புகைப் படங்கள் அடங்கிய மிகப் பிரமாண்டமான பதாகைகள் சாலை ஓரங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க்...

டேர்க் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் திற்குச் சென்று வழிபாட்டினை மேற் கொண்டார். (ம-7,33)

## நயினைத்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் இன்று ஆரம்ப மாகவுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் நடை பெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி திருமஞ்சத் திருவிழாவும் 8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 9ஆம் திகதி தேர்த் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## 2ஆம் கட்ட...

மூன்று குழந்தைகளின் மனித எச்சங்கள் உட்பட 19 மனித எச்சங் கள் மீட்கப்பட்ட நிலையில், அந்தப் புதைகுழி மனிதப் புதைகுழியாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத் தால் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் இரண்டாம் கட்ட அகழ் வுப் பணிகளுக்கு 45 நாட்களுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கி இருந் தது.

இந்நிலையில் அகழ்வுப் பணிக் கான செலவின பாதீடு சமர்ப்பிக்கப் பட்ட நிலையில், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ள மையால், இன்று வியாழக்கிழமை முதல் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்.நீதவான் நீதிமன்றுக்குத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## கட்சிப் பதவிகளை...

தெரிவுகளில் ஏற்பட்ட அதிருப்தி யினால் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கட்சிப் பதவிகளிலிருந்து விலகியுள்ள தாக அறியமுடிகின்றது.

அந்த வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக் கிளைச் செயலாளர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசக் கிளைத் தலைவர் ஆகிய பதவிகளிலிருந்தே பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் பதவி விலகியுள்ளார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேவேளை பாராளுமன்ற உறுப் பினர் ரவிகரன் தாம் கட்சிப் பதவி களிலிருந்து விலகும் இந்த முடிவை கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், கட்சியின் பொதுச்செய லாளர் எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் நிர் வாகச் செயலாளர் சேவியர் குல நாய கம் ஆகியோருக்கு நேற்று முன் தினம் (24) கடிதத்தின் மூலம் அறி வித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-7,299)

## மீன்வாங்க...

சென்ற ஒருவர் மயங்கி விழுந்து உயிரி ழந்துள்ளார்.

இதில் ஆறுகால்மடம் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த செல்லத்தம்பி ரவீந்திரன் (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் நேற்று புதன்கிழமை (25) துவிச்சக்கரவண்டியில் மீன் சந் தைக்குச் சென்றுள்ளார். அச்சமயம் சந் தைக்குள் மயங்கி விழுந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவா யம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## போராட்டக் களத்...

பதில் தலைவருமான சி.வி.கே.சிவ ஞானம் போராட்டக் களத்தில் நின்ற மக்களால் அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்.

செம்மணியில் நடைபெற்று வரும் அணையா விளக்குப் போராட்டம் நேற்றுப் புதன்கிழமை மூன்றாவது நாளாக தொடர் போராட்டமாக முன் னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் மதியம் போராட்டத் தில் கலந்து கொள்ளச் சென்ற சி.வி.கே சிவஞானத்தை அங்கிருந்த மக்கள் வெளியேறுமாறு கோஷங்களை எழுப்பி போராட்டக் களத்தில் இருந்து வெளியேற்றி இருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் என பகிரங்கமாகக் குற் றம் சாட்டப்பட்டு வரும் ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியினருடன் கூட்டுச் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைத்துள்ளதாகவும், அவ்வாறான வர்களுடன் கூட்டுச் சேர்ந்தவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள் ளத் தகுதியற்றவர்கள் எனக் கூறியே போராட்டக் களத்தில் இருந்து சி.வி.கே சிவஞானத்தை அப்புறப்படுத்தினர். (ம-7,33,104)

## செம்மணி...

காணப்பட்ட மனிதப் புதைகுழியைப் பார்வையிட்டார்.

சுமார் 30 நிமிடங்கள் வரையில் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட்ட அவர், பல்வேறு தரப்பு களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது செய்தி சேகரிப் பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனு மதி மறுக்கப்பட்ட நிலையில், புதை குழி காணப்படும் இடத்துக்கு சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு முன்பாகவே ஊடகவியலாளர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-7,33,104)

## 'அணை...

யாழ்ப்பாணத் துக்கு நேற்றுப் பிற்பகல் விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிய 'அணையா விளக்கு' போராட்டக் களத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்

செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்ட பின்னர் அதற்கு அருகில் இடம்பெறும் 'அணையா விளக்கு' போராட்டக் களத்துக்குச் சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பிரச்சினையையும் கேட்டறிந்தார்.

இதன்போது மக்கள் செயல் அமைப்பினரால் 'அணையா விளக்கு' போராட்டத்தின் கோரிக்கைகள் தொடர்பான மகஜர் ஒன்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,33,104)

## 6 கோரிக்கைகள்...

உரிமைகள் பேரவையின் ஆணை யாளர் வோல்கர் டேர்க்கிடம் 06 அம்ச கோரிக்கைகள் பொறிக்கப்பட்ட செப் புத் தகட்டினைக் கையளித்துள்ளனர்.

செம்மணிப் படுகொலைக்கு நீதி கோரி, யாழ்.வளைவுக்கு அண்மையில் கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அணையா விளக்கு ஏற்றப் பட்டு தொடர் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

மூன்று நாட்களாக தொடர் போராட் டமாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க் செம் மணி போராட்டக் களத்திற்குச் சென்ற வேளை, வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் தாய்மார்களால் 06 அம் சக் கோரிக்கைகள் அடங்கிய செப்புத் தகடு கையளிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

### மஹஜன சம்பத

திகதி 2025.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 5871
F 3 2 4 4 8 0
அத சம்பத F 4 4 8 0
சீட்டிழுப்பு இலக்கம் 446

### தன நிதானய

திகதி - 2025.06.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1901
U 14 25 69 77 U
Double Chance 59668

### மெகா பவர்

திகதி 25/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2219
Q 08 23 49 59 61

### ஜய

திகதி 2025.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 0139
U 4 0 0 0

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4113
சீட்டிழுப்பு திகதி 25.06.2025
J 20 55 63 77
J

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 1180
மீனம் 05 26 30 53 மீனம்
63630 45

### சுபிரி தன சம்பத

25.06.2025 வெற்றி வாரம் 579
C 2 3 8 1 1 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,933,140.80
74056

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2845
சீட்டிழுப்பு திகதி 2025.06.25 தினம் புதன்கிழமை
06 19 37 44 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,729,315.20

### சனிதா

திகதி 25.06.2025 வெற்றி வாரம் 5006
04 06 07 32 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,246,005.60
62433

### ஜயோதா

திகதி 2025.06.25 வெற்றி வாரம் 2138
22 26 51 66 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,087,942.40

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4557
சீட்டிழுப்பு திகதி 25.06.2025 தினம் புதன்கிழமை
06 19 43 60 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,812,693.60
110181

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 36 19 23 27 28
2021 25.06.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.579,474,775.60

### அட கோடிபதி

புதன்கிழமை வெற்றி வாரம் 2671
சீட்டிழுப்பு திகதி 2025.06.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,054,787.20
03 40 53 70 N
465644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிகுளம் பிரதேச சபை ஐக்கிய மக்கள் சக்தி வசம்

## தவிசாளராக தாஜூதீன் முகமது இம்தியாஸ் தெரிவு



வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக தாஜூதீன் முகமது இம்தியாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபைக்கான தவிசாளர், உபதவிசாளர் தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி தலைமையில், சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று (25) மாலை நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் தெரிவைப் பகிரங்கமாக நடத்துமாறு 12 உறுப்பினர்களும் இரகசியமாக நடத்துமாறு 6 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இம்தியாஸீக்கு ஆதரவாக 11வாக்குகளும், தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட தாவீது இசையாஸ் மிரால் அவர்களுக்கு 6 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

இதனடிப்படையில் முகமது இம்தியாஸ் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.


அவருக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மூன்று உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் இரண்டு உறுப்பினர்களும், ஜனநாயக தேசிய கூட்டணியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உபதவிசாளராக தமிழரசுக் கட்சி சார்பில் தேவசகாயம் சிவானந்தராசா போட்டியிட்டார்.

உபதவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அவர் உபதவிசாளராக தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை சுயேட்சை குழு உறுப்பினர் ஒருவர் தவிசாளர் தெரிவின் போது வெளிநடப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

# போராட்டக்காரர்களால் அப்புறப்படுத்தப்பட்ட கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர்




செம்மணியில் போராட்ட களத்தில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி ஆகியோர் அப்புறப்படுத்தப்பட்டனர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி ஆகியோர் செம்மணி போராட்டத் திடலுக்குச் சென்றனர். இதன்பொழுது போராட்டக்காரர்களால் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வெளியேற்றப்பட்டார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி காத்திருந்த நிலையில் அவரையும் சூழ்ந்து கொண்ட போராட்டக்காரர்கள் போராட்டக்களத்திலிருந்து அப்புறப்படுத்தினர். (ம-7,33,104)

# 'அணையா விளக்கு' போராட்டம் உணர்வெழுச்சியுடன் நிறைவு



செம்மணி மனிதப் புதைகுழிகளுக்கு நீதி கோரியும்- சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் முன்னெடுக்கப்பட்ட அணையா விளக்குப் போராட்டம் பேரெழுச்சியுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

இரு நாட்களுக்கு முன் செம்மணி வளைவுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டு வந்த அணையா விளக்குப் போராட்டத்தில், பெருமளவு மக்கள் நேற்று உணர்வெழுச்சியுடன் அணி திரண்டனர்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், வோல்கர் டேர்க், பிற்பகல் 5 மணியளவில் செம்மணி போராட்டக் களத்துக்கு வந்து, அணையா விளக்கு முன் மலர் தூவி வணக்கம் செலுத்தினார். சற்று நேரம் அவர்களுடன் பேசிவிட்டு புறப்பட்டுச் சென்றார்.

இதையடுத்து அணையா விளக்கு வைக்கப்பட்டிருந்த இடத்தில், ஒரு நிரந்தர நினைவுச்சின்னம் வைக்கப்பட்டு போராட்டம் முடிவுக்கு வந்தது. (ம-7)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3268) 076 825 7716 (ஆகாஸ்)


# அந்தியேட்டிக் கிரியையும் சபிண்டீகரண நிகழ்வும்

27.06.2025



அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி

மலர்வு 28.02.1951 | உதிர்வு 25.05.2025

அன்புடன் பண்பு சேர்த்து எம்மை வளர்த்து
அவனியில் நாம் நல்வாழ்வு வாழ வழிகாட்டி
அரியபல அறிவுரைகள் கூறி
எளிமையான வாழ்வதன் பொருள் உணர்த்தி
ஏற்றமுடன் நாம் வாழ வழிவகுத்த
எங்கள் அன்புத் தெய்வமே
எங்கு சென்றீர் அவசரமாய்
எமையெல்லாம் தவிக்கவிட்டு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(4627)

25.05.2025 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் முன்னின்று பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், அன்னாரது இல்லத்தில் 27.06.2025 வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை 5.00 மணியளவில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து காலை 11.00 மணியளவில் இடம்பெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக வேண்டி நிற்கின்றோம்.

கரணவாய், கரவெட்டி.
077 761 5234
077 554 0403
இங்ஙனம்: குடும்பத்தினர்

# தமிழர்களின் ...

ஐ.நா.மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இதனைத் தெரிவித்தார்

திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற சிவில் அமைப்புப் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட சிலரை திருகோணமலை கல்லூரி வீதியில் அமைந்துள்ள யுபிலி மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர் இந்த கருத்தைத் தெரிவித்திருந்தார். குறித்த கலந்துரையாடலில் காணி அபகரிப்புகள், காணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்கான பொறுப்புக் கூறல், படுகொலை செய்யப் பட்டவர்களுக்கான நீதி, இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், சர்வதேச நீதிப் பொறிமுறைகள் போன்ற பல விடயங்கள் பேசப்பட்டிருந்தன.

குறிப்பாக யுத்தம் நிறைவுற்றதற்குப் பின்னரான சூழ்நிலையிலும் இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை தமிழ் பேசும் மக்கள் நிழல் யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். குறிப்பாக வட கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயற்படுகின்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று வரைக் கும் இலங்கை அரசின் [illegible]யினரால் கண்காணிக்கப்பட்டும் விசாரிக்கப்பட்டும் வருகின்றார்கள்.

தமிழ் பேசும் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் வகையில் தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றது. இதுவும் ஒரு இன அழிப்பு எனவும் குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட மக்கள் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை அவர்களிடத்தில் கையளித்து அவர்களின் குடியிருப்பு மற்றும் தொழில் நடவடிக்கைகளுக்கு உதவுமாறும் வலியுறுத்தி இருந்தார்கள்.

இதன்போது பதிலளித்த ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், இந்த விடயங்கள் இலங்கையில் இருப்பதாக தான் உணர்வதாகவும், இதற்கான தீர்வினை இந்தத் தேசத்துடன் இணைந்துதான் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருப்பதாக இருந்தாலும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களே ஆகியுள்ள நிலையில் தொடர்ச்சியாக இந்த அரசாங்கத்தை இலங் கையில் மனித உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்துவதோடு, நீதிப்பொறிமுறை சார்ந்த விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருக்கின்றது எனவும். அதே போல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிப் பொறிமுறையினை சரியான முறையில்நடை முறைப் படுத்துவதற்கு எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் ஜனாதிபதியை தான் சந்திப்பதாகவும், இச்சந்தர்ப்பத்தில் இது தொடர்பாகக் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்திருந்தார். (ம-7)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org